Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 25 of 2025**

**Deposition of P.W.7 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. வடிவேல் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of September 2025.

( A1 present. A2 absent. Petition U/s.317 crpc filed and allowed.)

(எதிரிகள் தரப்பில் குற்றவியல் பல்வகை மனு எண் MP.3/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :**

எனக்கு சம்பவம் பற்றி நேரில் தெரியாது. நான் 27.07.2024ம் தேதி மாலை தங்கவேல் காட்டிற்கு போன சமயம் அங்கு போலீசார் இல்லை. தங்கவேல் காட்டிற்கு மேல்புறம் உள்ள பாதையை இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு பொதுமக்கள் போய்வருவதற்கும் பயன்படுத்தபட்டு வருகிறது என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அந்த கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

மறுவிசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 25 of 2025**

**Deposition of P.W.9 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சின்னதுரை | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of September 2025.

( A1 is present. A2 absent. Petition U/s.317 crpc filed and allowed.)

(எதிரிகள் தரப்பில் குற்றவியல் பல்வகை மனு எண் MP.3/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :**

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை 13.08.2024ம் தேதியில் கபிலர்மலை தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்து 16 நாட்கள் கழித்து தான் நான் சம்பவ இடத்தை பார்வையிட்டேன் என்றால் சரியல்ல. 29.07.2024ம் தேதி முதலில் பார்வையிட்டேன். அப்போது போலீசார், கிராமநிர்வாக அலுவலர் மற்றும் தோட்ட உரிமையாளர் தங்கவேல் ஆகியோர்கள் இருந்தார்கள். அன்றைய தினமே மதிப்பீடு தயார் செய்யவில்லை. ஆனால் விவரங்களை சேகரித்து வைத்திருந்தோம். போலீசாரிடமிருந்து கடிதம் வந்தபிறகு அந்த விவரங்களை போலீசாரிடம் கொடுத்தோம். நான் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து அறிக்கை வழங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.3 அறிக்கையில் கரும்பு பயிரின் உயரம், தென்னங்கன்றின் உயரம் ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்லவில்லை.

பயிர் செய்து இரண்டு ஆண்டுகளுக்கு எவ்வளவு செலவாகும் என்பதை கணக்கிட்டு மதிப்பீட்டு அறிக்கை வழங்கியுள்ளோம்.

மறுவிசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 25 of 2025

## Deposition of P.W.10 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பிரவீன் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of September 2025.

( A1 is present. A2 absent. Petition U/s.317 crpc filed and allowed.)

(எதிரிகள் தரப்பில் குற்றவியல் பல்வகை மனு எண் MP.3/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :**

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை என் கடைக்கு வந்து 12.08.2024ம் தேதி விசாரித்தார்கள். நெட்டாபார்ம் என்ற கம்பெனி பொருட்களை பயன்படுத்தி சொட்டு நீர் பாசன அமைப்பை செய்து வருகிறேன். சொட்டு நீர் பாசன அமைப்பு ஏற்படுத்த விவசாயிகளுக்கு அரசாங்கத்திலிருந்து மானியம் வழங்கப்படுகிறது. கரும்பு பயிருக்கு சொட்டு நீர் பைப்கள் பூமிக்கடியில் அரை அடி ஆழத்தில் பதிக்கப்படும். கரும்பு வெட்டிய பிறகு, தோகைக்கு தீ வைக்கும்போது கரும்பு பயிருக்காக பூமிக்கடியில் பதிக்கப்பட்டுள்ள சொட்டு நீர் பைப்கள் சேதமாகும். அந்த பைப்களுக்கு எந்த சேதமும் ஏற்படாது என்று சொன்னால் சரியல்ல. கரும்பு பயிருக்கு சொட்டு நீர் பாசன அமைப்பை ஏற்படுத்த ஏக்கருக்கு ரூ.60,000/- செலவாகும். ஒரு ெஹக்டேருக்கு ரூ.1,20,000/- மானியம் கிடைக்கிறது. 5 ஏக்கருக்கு மேல் சொட்டு நீர் பாசனம் ஏற்படுத்தும் பெரிய விவசாயிக்கு ஒரு ெஹக்டேருக்கு ரூ.89,000/- மானியம் கிடைக்கும். 7 வருடத்திற்கு ஒருமுறை சொட்டுநீர் அமைப்பை புதுப்பிப்பதற்கும் மானியம் கிடைக்கும். தங்கவேல் காட்டில் கரும்பு பயிருக்கு போடப்பட்டுள்ள சொட்டு நீர் அமைப்பை 2019ல் போட்டேன். தென்னை மரத்திற்கு சொட்டு நீர் பிவிசி பைப்களை ஒரு அடி ஆழத்தில் பதிப்போம். அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆவணங்களில் உள்ள மதிப்பை தோராயமாக போட்டோம். 2024ம் வருடத்திய ஆகஸ்ட் மாத விலைப்பட்டியலின் அடிப்படையில் மதிப்பீட்டை

வழங்கியுள்ளேன். போலீசார் கேட்டுக்கொண்டபடி இடத்தை ஆய்வு செய்யாமலேயே தோராயமாக மதிப்பீடு செய்து சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 2019ல் சொட்டு நீர் அமைப்பை ஏற்படுத்திய போது உபகரணங்கள் வாங்கியதற்கான பில்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை.

மறுவிசாரணை : இல்லை.